1989 மார்ச் 27]

(ஈ) முன்பண மானியக் கோரிக்கைகள் மொழிதல் (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு 1989-90 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது :

"In pursuance of Article 206, clause (2) read with Article 203, clause (3) of the Consttiution of India, I, Dr. P. C. Alaxander, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Advance Grants for the year 1989-90.

7. முன்பண மானியக் கோரிக்கைகள், 1989–90—வாக்கெடுப்பு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் : " 1989-90 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய 25-3-1989 ஆம் தேதியிடப் பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகையை 1989-90 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவிற்காக மொத்தமாக ரூபாய் 1,103 கோடியே 71 லட்சத்து 52 ஆயிரத்திற்கு மேற்படாத தொகையை அரசுக்கு முன்பணமாக வழங்கப்பெற வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

நிறைவேற்றப்பெற்ற 1989-90 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்.

ஏ. வருவாய்க் கணக்கில் செலவு

கோரிக்கை.		ரூபாய் ஆயிரத்தில்.
1	நிலவரித் துறை	5,65,12
2	மாநில ஆயத் தீர்வைத் துறை ..	1,08,81
3	மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிருவாகம்	1,32,35
4	பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம் ..	5,99,45
5	முத்திரைத் தாள்கள்—நிருவாகம்— ..	42,07